Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم    نحمده ونصلّی علی رسوله الكريم    وعلیٰ عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 20

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

21 ஷஃபான் 1438 ஹிஜ்ரி கமரி 18 ஹிஜ்ரத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

18 மே 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**பாருங்கள். நான் இதனைக் கூறிவிட்டு தப்லீக் எனப்படும் பிரச்சாரத்தின் கடமைகளிலிருந்து சற்று ஓய்வு பெறுகிறேன். அதாவது, பாவம் ஒரு விஷமாகும். அதனை நீங்கள் அருந்தாதீர்கள். இறைவனுக்கு கீழ்ப்படியாமை ஒரு தீய மரணமாகும். இதிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு சக்தி கிடைப்பதற்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்து வாருங்கள். எவர் உண்மையாக உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்க மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவராக மாட்டார். எவர் ஒவ்வொரு தீமையிலிருந்தும் தீய செயலிலிருந்தும் இறைவனிடம் முழுமையான பாவமன்னிப்புக் கோரமாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நாம் வெளிப்படையாக பைஅத் என்னும் உடன்படிக்கை செய்து விட்டோம் என்று நீங்கள் நினைக்காதீர்கள். வெறும் வெளிப்படையான செயல், பொருளற்றதாகும். இறைவன் உங்களது உள்ளங்களையே பார்க்கிறான். அதன்படியே உங்களோடு அவன் நடந்து கொள்வான்.

பாருங்கள். நான் இதனைக் கூறிவிட்டு தப்லீக் எனப்படும் பிரச்சாரத்தின் கடமைகளிலிருந்து சற்று ஓய்வு பெறுகிறேன். அதாவது, பாவம் ஒரு விஷமாகும். அதனை நீங்கள் அருந்தாதீர்கள். இறைவனுக்கு கீழ்ப்படியாமை ஒரு தீய மரணமாகும். இதிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு சக்தி கிடைப்பதற்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்து வாருங்கள். எவர் துஆச் செய்யும் சமயத்தில் இறைவனின் வாக்குறுதியின் மூலம் முன்பே விதிவிலக்காக்கப்பட்டதைத் தவிர ஒவ்வொரு விஷயத்திற்கும் இறைவன் சக்தியுள்ளவன் என அவனை நம்ப மாட்டரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் பொய்யையும் ஏமாற்றுவதையும் விட்டு விடவில்லையோ அவர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் மறுமையின் பக்கம் சிறிதும் கவனம் செலுத்தாமல் உலகப் பேராசையில் மூழ்கி இருப்பாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவராகமாட்டார். எவர் உண்மையாக உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்க மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவராக மாட்டார். எவர் ஒவ்வொரு தீமையையும் தீய செயலையும் அதாவது மது அருந்துதல், சூதாட்டம், தீய பார்வை, நம்பிக்கைத் துரோகம், லஞ்சம் வாங்குதல் முதலிய கூடாத செயல்களிலிருந்து விலகி இறைவனிடம் முழுமையாக பாவமன்னிப்புக் கோரமாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் ஐந்து நேரத் தொழுகைகளையும் கடைபிடிக்க மாட்டாரோ அவர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர்.

எவர் பிரார்த்தனையில் தொடர்ந்து ஈடுபடாமலும், பணிவுடன் இறைவனை நினைவு கூராமலும் இருக்கின்றாரோ அவர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் தன் மீது தீய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கெட்ட நண்பர்களோடுள்ள தொடர்பை விட்டொழிக்க மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் தனது பெற்றோருக்கு மதிப்பு அளிக்காமலும் திருக்குர்ஆனின் போதனைக்கு மாற்றமில்லாத அவர்களது நல்ல விஷயங்களை ஒப்புக் கொள்ளாமலும் அவர்களுக்கு சேவை செய்வதில் கவனமில்லாமலும் இருக்கின்றாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் தனது மனைவியோடும் அவரின் உறவினர்களோடும் மென்மையுடனும் அனுதாபத்துடனும் நடந்து கொள்ள மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் தனது அண்டை வீட்டுக்காரர் -களுக்குச் சிறு சிறு நன்மைகளையும் புரிவதில்லையோ அவர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் தனக்கு தீங்கு விளைவித்தவரின் குற்றத்தை மன்னிக்காமல் அவர் மீது பகைமை பாராட்டுவாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவரல்லர். தன் மனைவியை வஞ்சிக்கின்ற கணவனும், தன் கணவனை வஞ்சிக்கின்ற மனைவியும் என் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் என்னிடம் பைஅத் என்னும் உடன்படிக்கையின்போது செய்த வாக்குறுதிகளை ஏதாவதொரு வகையில் மீறுவாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் என்னை உண்மையாக வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தியாகவும் நம்பவில்லையோ அவர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவரல்லர். எவர் அனைத்து நற்காரியங்களிலும் என்னைப் பின்பற்றத் தயாராக இல்லையோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர். எவர் பகைமைவர்களின் கூட்டத்தில் போய் இருந்து கொண்டு அவர்களது கூற்றுகளுக்கு ஆமாம் போடுவாரோ அவரும் என் ஜமாஅத்தைச் சார்ந்தவராக மாட்டார். விபச்சாரம் புரியும் ஒவ்வொருவரும், கெட்ட நடத்தை உள்ளவரும், மது அருந்துகிறவரும், கொலையாளியும், திருடரும், சூதாட்டக்காரரும், நம்பிக்கைத் துரோகியும், லஞ்சம் வாங்குகிறவரும், அக்கிரமக்காரரும், அநியாயக்காரரும், புறம்பேசுகின்றவரும், பொய்யரும், ஏமாற்றுக்காரரும், இவர்களோடு கூட்டுச் சேர்ந்தவரும், தனது சகோதர சகோதரிகள் மீது பொய்க் குற்றம் சுமத்தக் கூடியவரும், தனது தீய செயல்களிலிருந்து பாவமன்னிப்புக் கோராதவரும், கெட்டக் கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளாதவரும் ஆகிய இத்தகையவர்கள் அனைவரும் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாகக் கருதத்தக்கவர்கள் அல்லர்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 123 -வது காதியான் ஆண்டு மாநாடு 2017 டிசம்பர் 29, 30 மற்றும் 31 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆகள் செய்தவாறு இந்த அருளுக்குரிய மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக ஆயத்தமாகும் பணிகளை செய்ய ஆரம்பித்து விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அல்லாஹ்வுக்காக இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அருள்களைப் பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும் அருளுக்குரியதாகவும் ஆவதற்காக நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கு காரணமாக இருப்பதற்கும் சகோதரர்கள் அனைவரும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ். (தலைமைய நாஸிர் இஸ்லாஹே இர்ஷாத், காதியான்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

நம்மவர்களின் பழக்கம் என்னவென்றால், பணி நடக்க வேண்டிய குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில்தான் அவர்கள் பணிகளைச் செய்ய ஆரம்பிக்கின்றனர். வேலை நடந்து விடும் என்ற எதிர்பார்ப்பில் இருந்து விடுகின்றனர். அல்லாஹ்வின் அருளால் எதிர்பாராத விதமாக சில வேலைகள் அவ்வாறு நடந்தும் விடுகின்றன. ஒருவேளை அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லாத வேறு ஒன்றின் பணியாக இருந்தால் நடக்காமலும் கூட போய் விடலாம். அதற்காக முன்னரே திட்டமிடக் கூடாது என்பது பொருளல்ல.

அல்லாஹ் நிர்வாகத்திற்கு அறிவை வழங்குவானாக! எல்லாம் சரியாகி விடும் என்ற நினைப்பில் பீடிக்கப்பட்டு விடுவதிலிருந்து அல்லாஹ் காப்பானாக! உண்மையைப் புரிந்து கொண்டு அவர்கள் பணி செய்வார்களாக! நீங்கள் உங்கள் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள். இவர்களின் பணிகள் எளிதாவதற்காக இவர்களுக்காக துஆ செய்வதும் உங்கள் கடமையேயாகும்.

ஜமாஅத் வளரவுள்ளது - இன்ஷா அல்லாஹ். வளர்ந்து கொண்டிருக்கிறது. எனவே எந்த இடங்களை நாம் வாங்குவோமோ அது சிறிதாகிக் கொண்டேதான் செல்லும். ஆனால், ஓரிடத்தை வாங்கி விட்டு, நமது அசட்டையால் பல வருடங்களாக அதனைப் பயன்படுத்தாமல் இருந்ததால் இந்த இடமும் நெருக்கடியாகி விட்டது என்று கூறுவது ஒரு பதிலல்ல; அறிவுடைமையும் அல்ல.

லாஹூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய பேராசிரியர் டாக்டர் அஷ்ஃபாக் அஹ்மது சாஹிப், இந்தியாவிலுள்ள கிழக்கு கோதாவரியின் முபல்லிக் இன்சார்ஜ் ஆக இருந்த மதிப்பிற்குரிய H. நாஸிருத்தீன் சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதா மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதி அமத்துல் வஹீது பேகம் சாஹிபா ஆகியோர் வஃபாத்தாகி விட்டனர். மர்ஹூம்களின் நற்குறிப்பு எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

இவர்களுள் சிலரின் பண்புகள் ஜமாஅத்தின் எல்லா மட்டத்தில் உள்ளவர்களுக்கும் நல்ல முன்னுதாரணமாகும். இவர்களின் இந்த செயல்கள் நம்மில் ஒவ்வொருவரும் பின்பற்றத் தகுந்தவையாகும். பலருக்கு அதில் பாடம் உள்ளது. ஆகவே, நான் இந்த மர்ஹூம்களின் நற்குறிப்பை சுருக்கமாகக் கூறுவதற்கு பகரமாக, சற்று விரிவாக்கிக் கூறலாம் என்று நினைத்தேன். என் முன்னால் கொண்டு வரப்பட்டுள்ள ஒவ்வொருவரின் வாழ்வின் அம்சங்களைப் பார்க்கும்போது مَنْ قَضٰى نَحْبَهٗ - அவர்கள் தங்கள் உடன்படிக்கையையும், எண்ணங்களையும், விருப்பத்தையும் நிறைவேற்றி விட்டார்கள் (32:24) என்ற வசனத்தை அவர்கள் உண்மையாக்கியவர்கள் ஆவர் என்று நான் அறிகிறேன். இவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு தமது வாழ்வைக் கழித்தவர்கள். அதே நிலையில் இறைவன் முன்னால் சென்று விட்டார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஜெர்மனியின் FrankFort -லுள்ள Raunheim என்ற இடத்தில்**
**14 ஏப்ரல் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **14 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

எல்லாவற்றிற்கும் முதலில் நான் கூற விரும்புவது ஜுமுஆவுக்காக நாம் இன்று எடுத்திருக்கிற இந்த இடம்தான் அடுத்த ஜுமுஆவுக்காகவும் என்று கூறப்படுகிறது. இங்கு விமான நிலையம் அருகில் இருப்பதால் விமானங்களின் போக்குவரத்துகளின் காரணமாக சில வேளைகளில் விமானங்களின் இரைச்சல் ஏற்படலாம். சில நேரங்களில் இன்னும் அதிகமாகவும் இருக்கலாம். இரைச்சலுக்கிடையிலும் எனது குரல் வந்து சேர்வதற்கு நான் முயற்சி செய்வேன். வார்த்தைகளும் உங்களுக்குப் புரியும் விதத்தில் வந்து சேர வைப்பேன். இப்போது இருப்பது போன்று இரைச்சல் இருந்தால் அதனை சகித்துக் கொள்ளலாம். இது காற்று வீசும் திசையையும் சார்ந்துள்ளது என்கின்றனர். காற்று இப்பக்கமாக வீசினால் இரைச்சல் அதிகமாக இருக்கிறது. மறுபக்கமாக காற்று வீசினால் இரைச்சல் குறைவாக இருக்கும்.

எவ்வாறிருப்பினும், இட நெருக்கடியின் காரணமாக பைத்துஸ் ஸுபூஹ் -ல் ஒன்று திரள முடியாதிருந்தது. பொருத்தமான விலையில் வேறு ஓர் இடம் அல்லது ஹால் ஜமாஅத்திற்கு கிடைக்க இயலாமல் இருந்தது என்று கூறுகின்றனர். குறித்த நேரத்தில் முயற்சி செய்திருந்தால் கிடைத்திருக்கலாம் என்பது எனது கருத்தாகும். ஆனால் நம்மவர்களின் பழக்கம் என்னவென்றால், பணி நடக்க வேண்டிய குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில்தான் அவர்கள் பணிகளைச் செய்ய ஆரம்பிக்கின்றனர். வேலை நடந்து விடும் என்ற எதிர்பார்ப்பில் இருந்து விடுகின்றனர். அல்லாஹ்வின் அருளால் எதிர்பாராத விதமாக சில வேலைகள் அவ்வாறு நடந்தும் விடுகின்றன. ஒருவேளை அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லாத வேறு ஒன்றின் பணியாக இருந்தால் நடக்காமலும் கூட போய் விடலாம். அதற்காக முன்னரே திட்டமிடக் கூடாது என்பது பொருளல்ல.

இந்த நல்ல எதிர்பார்ப்பு, கவனமின்மை, முக்கியத்துவத்தை உணராமை காரணமாக புதிதாக வாங்கப்பட்ட பைத்துஸ் ஸுபூஹின் அருகிலுள்ள இடமான பைத்துல் ஆஃபியத்தில் ஜுமுவோ வேறு எந்த வகையான நிகழ்ச்சியையோ நடத்த முடியவில்லை. கடந்த வருடம் நான் மாநாட்டிற்கு வந்திருந்தபோது பைத்துஸ் ஸுபூஹில் ஜுமுஆ நடத்தினேன். இடநெருக்கடியால் பெண்களையும் அருகிலுள்ள ஜமாஅத்துகளையும் ஜுமுஆவிற்கு வர வேண்டாம் என்று தடுக்கப்பட்டது. அப்போது நான் ஜமாஅத் நிர்வாகிகளிடம் பைத்துல் ஆஃபியத்தைப் பயன்படுத்துவதற்கு விரைவில் அனுமதி வாங்குங்கள் என்று கூறியிருந்தேன். அதன் மூலம் இதுபோன்ற சிக்கல்களை நாம் எதிர்கொள்ளாமல் இருப்பதற்காக அவ்வாறு செய்ய வேண்டும் என்று கூறியிருந்தேன்.

எனது கருத்தின்படி அல்லது இவர்கள் தந்த அறிக்கையின்படி பொறுப்புடன் முயற்சி செய்யுங்கள். ஆனால் கவுன்சில் சிறு சிறு ஆட்சேபனைகளை வைத்துக் கொண்டே செல்கிறது. இவற்றை இவர்கள் முதலிலேயே கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். போனவுடன் அனுமதி தருவதற்கு கவுன்சில் ஒன்றும் இவர்களின் நிர்வாகத்தின் கீழ் இல்லை. கட்டடம் வாங்கியதிலிருந்து பொறுப்புடன் உடனடியாக அதனைப் பயன்படுத்த அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். செய்ய வேண்டிய மாறுதலுக்கான பணிகளையும் ஆரம்பித்திருக்க வேண்டும். அந்தப் பணியை ஆரம்பித்திருந்தால் இன்று இந்த சிக்கல் ஏற்பட்டிருக்காது.

ஈஸ்டரின் விடுமுறை விடப்பட்டுள்ளதால் மக்களின் வருகை அதிகமாக இருப்பதால் இது பெரிய இடமாகும் என்று கருதப்பட்ட இந்த இடமும் நெருக்கடியாக உள்ளது. பைத்துல் ஆஃபியத்திலும் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கும். ஆனால் பொதுவான ஜுமுஆக்களை அங்கு தொழ முடிந்திருக்கும். 2–3 வருடங்கள் ஆகி விட்டன. கட்டடம் வாங்கப்பட்டு இதுவரை அதனை பயன்படுத்துவதில் சில தடைகள் உள்ளன. இந்த இடம் வாங்கும்போதாவது உலகின் நிலை சற்று மேம்பட்டிருந்தது. முஸ்லிம்களின் நிலை சற்று நன்றாக இருந்தது. இதனால் அப்போது பணியைத் தொடங்கி இருந்தால் அனுமதி விரைவில் கிடைத்திருக்கலாம். ஆனால் இன்று முஸ்லிம்களைப் பற்றி இவர்களின் பாதுகாப்புணர்வு மிகவும் அதிகமாகி விட்டது. இதனால் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒருவேளை அமீர் சாஹிபும் நிர்வாகமும் இது காரணமில்லை என்று கூறலாம். இவ்வாறுதான் நடக்க வேண்டிய –திருந்தது என்று கூறலாம்.

எவ்வாறிருப்பினும் இவர்களின் அசட்டையாலும் பணிகளை தள்ளிப்போடும் வழக்கம் காரணமாகவும் இன்று இந்த சிக்கல் எழுந்துள்ளது. அல்லாஹ் நிர்வாகத்திற்கு அறிவை வழங்குவானாக! எல்லாம் சரியாகி விடும் என்ற நினைப்பில் பீடிக்கப்பட்டு விடுவதிலிருந்து அல்லாஹ் காப்பானாக! உண்மையைப் புரிந்து கொண்டு அவர்கள் பணி செய்வார்களாக! நீங்கள் உங்கள் பொறுப்பாளர் –களைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள். இவர்களின் பணிகள் எளிதாவதற்காக இவர்களுக்காக துஆ செய்வதும் உங்கள் கடமையேயாகும்.

எவ்வாறிருப்பினும், ஒரு சில நிமிடங்களில் 2–4 விமானங்களின் இரைச்சலைக் கேட்டு விட்டோம். இதனை சகித்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இரண்டாவது அம்சம் குறிப்பிட்ட அளவு மக்களை மட்டும் ஜுமுஆவுக்கு வருமாறு கூறுவது, பெண்களை தடுத்து விடுவது சரியல்ல. பாகிஸ்தானில் அல்லது ஜமாஅத்திற்கு எதிர்ப்பு உள்ள இடத்திலுள்ள நிலைமைகளின் காரணமாக பெண்கள் ஜுமுஆவுக்கு வருவது தடுக்கப்படுகிறது. பல்வேறு இடங்களில் ஜுமுஆ நடத்தப்படுகிறது. தலைமையகத்தில் நடத்தப்படுவதில்லை. அல்ஜீரியாவில் முழுவதும் தடை உள்ளது. அங்கு தொழுகை மையங்களில் – ஏன் வீடுகளில் கூட ஒன்று கூட இயலாது. அங்கு அநீதியான சட்டம் மற்றும் எதிரிகளின் மீதுள்ள பயத்தால் அவ்வாறு நடக்கிறது. இங்கு மார்க்கச் சுதந்திரம் உள்ள இடத்தில் இந்தத் தடைகளை ஏற்படுத்துவது நமது அசட்டை மற்றும் விவகாரத்தின் முக்கியத்துவத்தை உணராமையின் விளைவால் நடப்பதாகும்.

எவ்வாறிருப்பினும், துஆ செய்யுங்கள். வரக் கூடிய ஜுமுஆவில் அதாவது வருங்காலத்தின்

ஜுமுஆவில் அடுத்த ஜுமுஆவை நான் கூறவில்லை. இனி வரக்கூடிய நிகழ்ச்சிகளை பைத்துல் ஆஃபிய்யத்தில் நடத்தவும் ஜுமுஆவுக்காக அதனைப் பயன்படுத்தவும் அனுமதி கிடைக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் எல்லாரும் வசதியாக அமரும் அளவுக்கு ஓரிடம் கிடைக்க வேண்டும். இந்த நெருக்கடி பைத்துல் ஆபிய்யத்திலும் சிறிது நேரத்திற்காக அகல முடியும். ஜமாஅத் வளரவுள்ளது – இன்ஷா அல்லாஹ். வளர்ந்து கொண்டிருக்கிறது. எனவே எந்த இடங்களை நாம் வாங்குவோமோ அது சிறிதாகிக் கொண்டேதான் செல்லும். ஆனால், ஓரிடத்தை வாங்கி விட்டு, நமது அசட்டையால் பல வருடங்களாக அதனைப் பயன்படுத்தாமல் இருந்ததால் இந்த இடமும் நெருக்கடியாகி விட்டது என்று கூறுவது ஒரு பதிலல்ல; அறிவுடைமையும் அல்ல.

எவ்வாறிருப்பினும், இந்த கருத்திற்குப் பிறகு சில மர்ஹூம்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைக்க வேண்டியதிருந்ததால் அவர்களைப் பற்றிய சில கருத்துக்கள் முன்னால் வந்து விட்டன. நான் அவர்களைப் பற்றியே கூறலாம் என்று யோசித்தேன். அவர்களுள் இயக்கத்திற்காக ஷஹீதான ஒருவரும் இருக்கிறார். இன்னொருவர் ஜமாஅத்தின் முரப்பி ஆவார். மற்றொருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பேத்தி ஆவார். இவர்களுள் சிலரின் பண்புகள் ஜமாஅத்தின் எல்லா மட்டத்தில் உள்ளவர்களுக்கும் நல்ல முன்னுதாரணமாகும். இவர்களின் இந்த செயல்கள் நம்மில் ஒவ்வொருவரும் பின்பற்றத் தகுந்தவையாகும். பலருக்கு அதில் பாடம் உள்ளது. ஆகவே, நான் இந்த மர்ஹூம்களின் நற்குறிப்பை சுருக்கமாகக் கூறுவதற்கு பகரமாக, சற்று விரிவாக்கிக் கூறலாம் என்று நினைத்தேன். என் முன்னால் கொண்டு வரப்பட்டுள்ள ஒவ்வொருவரின் வாழ்வின் அம்சங்களையும் مَنۡ قَضٰی نَحۡبَہٗ – அவர்கள் தங்கள் உடன்படிக்கையையும், எண்ணங்களையும், விருப்பத்தையும் நிறைவேற்றி விட்டார்கள் (32:24) என்ற வசனத்தை அவர்கள் உண்மையாக்கியவர்கள் ஆவர் என்று நான் அறிகிறேன். இவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு தமது வாழ்வைக் கழித்தவர்கள். அதே நிலையில் இறைவன் முன்னால் சென்று விட்டார்கள்.

அவர்களுள் நமது முதலாவதாக நான் குறிப்பிடுவது ஷஹீது சகோதரர் பேராசிரியர் டாக்டர் அஷ்ஃபாக் அஹ்மத் சாஹிப் ஆவார். இவர் கடந்த ஜுமுஆ நாளன்று ஷஹீதாக்கப்பட்டார். ஓய்வு பெற்ற பேராசிரியர் டாக்டர் அஷ்ஃபாக் அஹ்மத் சாஹிப் லாஹூரின் சேக் சுல்தான் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். இவரது வயது 68. கடந்த ஜுமுஆ நாளன்று ஜுமுஆ தொழுகைக்காக தமது காரில் பைத்துத் தவ்ஹீதிற்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஜமாஅத்தின் எதிரிகள் இவரை சுட்டு ஷஹீதாக்கி விட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். விபரங்களின்படி கூறப்பட்டுள்ளதாவது, ஜுமுஆ நாளில் ஷஹீது மர்ஹூம் தமது 12 வயது பேரன் ஷாஹ் ஸேப் மற்றும் ஹஸார் ஹல்காவைச் சார்ந்த ஓர் அஹ்மதி நண்பரான கண்ணியத்திற்குரிய ஸஹீர் அஹ்மத் சாஹிபுடன் காரில் ஜுமுஆவுக்காக பள்ளிவாயிலுக்குச் சென்று கொண்டிருந்தார். ஷஹீது மர்ஹூம் தாமே காரை ஓட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தார். பேரன் முன் பக்கம் உள்ள இன்னொரு சீட்டில் அமர்ந்திருந்தார். இன்னொரு நண்பர் பின்னால் அமர்ந்திருந்தார். ஸப்சாசாரில் இருந்து முல்தான் ரோடு சென்றதும் அங்கு சாலைப் பணி நடந்து கொண்டிருந்ததால் சிறிது நிற்க வேண்டியது வந்தது. இவரது வண்டி நின்றதுமே தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் டிரைவிங் சீட்டுக்கு அருகில் வந்து நெற்றிப் பொட்டில் பிஸ்டலை வைத்து குண்டை செலுத்தி விட்டு ஓடிப்போய் விட்டார். குண்டு பட்டதும் அது மறுபுறம் வெளி வந்து விட்டது. அந்த இடத்திலேயே அன்னார் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். மற்ற இருவரும் பாதுகாப்பாக இருந்தனர். அவர்களுக்கு காயம் ஏற்படவில்லை.

ஷஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அஹ்மதிய்யத், ஷஹீது மர்ஹூமின் தந்தைவழிப் பாட்டனார் சேக் அப்துல் கதிர் சாஹிபின் மூலம் ஊன்றப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லூதியானா வந்த காலத்திலேயே இது நடந்தது. அவரது குடும்பம் இந்தியாவின் கிழக்கு பஞ்சாபின் சங்ரூரைச் சார்ந்ததாக இருந்தது. இந்த பகுதியின் பெரியவர் கண்ணியத்திற்குரிய மீரான் பக்ஷ் சாஹிப் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு இவரது பாட்டனாரையும் அஹ்மதிய்யத்தை ஏற்குமாறு அழைப்பு விடுத்தார். ஷஹீது மர்ஹூம், குடும்பத்துடன் அஹ்மதிய்யத்தை ஏற்றார். பாக்கிஸ்தான் உருவாகும் முன்பே ஷஹீது மர்ஹூமின் பாட்டனார் வஃபாத் ஆகி விட்டார். பாகிஸ்தான் உருவான பிறகு இவரது தந்தைவழிப் பாட்டி கண்ணியத்திற்குரிய ஆயிஷா சாஹிபா இடம் பெயர்ந்து குடும்பத்தை இந்தியாவில் இருந்து பாகிஸ்தானின் லாஹூருக்கு அழைத்து வந்தார். சில காலம் முகாமில் தங்கியிருந்த பிறகு கிரிஷன் நகர் லாஹூருக்கு வந்து விட்டார். அங்கேயே ஷஹீது மர்ஹூம் 1949–ல் பிறந்தார். சில காலம் கழித்து இந்த குடும்பம் ரப்வாவுக்கு இடம் மாறியது. ஷஹீது மர்ஹூம் தமது தொடக்கக் கல்வியை ரப்வாவில் பெற்றார். மெட்ரிக் தேர்ச்சி பெற்ற பிறகு லாஹூரிலுள்ள வெட்னரி கல்லூரியில் படிக்க சேர்ந்தார். பிறகு இதற்காக இவரது குடும்பம் மீண்டும் லாஹூருக்கு இடம் மாறியது. M.Sc வெட்னரீஸ் படித்த பிறகு வெட்னரி கல்லூரியில் ஆசிரியராக பணி செய்தார். பிறகு பேராசிரியர் பதவி வரை உயர்ந்தார்.

மர்ஹூமின் தந்தை சேக் சுல்தான் அஹ்மத் சாஹிப் பஞ்சாப் போலீஸில் சப் இன்ஸ்பெக்டராக இருந்தார். பிறகு இன்ஸ்பெக்டராக பணி செய்தார். அல்லாஹ்வின் அருளால் மர்ஹூம் மூஸியாக இருந்தார். கிலாஃபத்துடன் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார். தஹஜ்ஜுத் தொழுபவராகவும், விருந்தோம்பல் செய்பவராகவும், படைப்பின் சேவை செய்பவராகவும், பொறுப்பாளர்களுக்கு கட்டுப்படுபவ–ராகவும், நல்ல மாசற்ற மனிதராகவும் இருந்தார். ஜமாஅத் பணிகளில் எப்போதும் முன்னணியில் நிற்பார். மிகவும் உயர் நல்லொழுக்கம் கொண்டவர். அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதில் நல்ல ஆர்வம் இருந்தது. பழகுவதற்கு எளியவருமாக இருந்தார். அதனால் தமது மாணவர்கள் மற்றும் உடனிருந்த பேராசிரியர்கள் அனைவராலும் ஒன்றுபட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டவராகவும் இருந்தார்.

தமது உடனிருந்த பேராசிரியர்களை வீட்டுக்கு விருந்திற்கு அழைத்து ஜமாஅத்தின் தாக்கத்தை ஏற்படுத்தும் ரீதியில் அறிமுகம் செய்து வைப்பார். இதன் காரணமாக இவருக்கு மிரட்டல்களும் வந்தன. ஆனால் அவர் அதனை பொருட்படுத்தியதில்லை. மாறாக, இது சாதாரண விஷயம்தான் என்று கூறி வந்தார். சிறுவயதிலிருந்தே மர்ஹூமுக்கு ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் ஆர்வம் மிக அதிகமாக இருந்தது. ஜமாஅத்தின் அடிப்படையிலும் கிளை அமைப்புகளின் கீழும் பல்வேறு இடங்களில் பல்வேறு துறைகளில் ஜமாஅத்துக்கு தொண்டாற்றும் வாய்ப்பு பெற்று வந்தார். ஸப்சாரா வட்டத்தில் வசித்த காலத்திற்குப் பிறகு அந்த ஹல்காவின் தலைவர் ஆகவும், ஸயீமே அஃலா அன்ஸாருல்லாஹ்வாகவும் மிகச் சிறப்பாக தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்றார்.

இவ்வருடம் அவர் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் துறையின் செயலராக அல்லாமா இக்பால் டவுண் லாஹூரில் நியமிக்கப்பட்டிருந்தார். மிகச் சிறந்த முறையில் தஃவத்தே இலல்லாஹ் பணியைச் செய்து வந்தார். இவரது மனைவி வலிப்பு நோயினால் மிக நீண்ட காலம் பீடிக்கப்பட்டிருந்தார். மிகவும் மகிழ்ச்சியுடன் அவருக்கு தொண்டு செய்து வந்தார். கடந்த வருடம் டிசம்பரில் அவரது மனைவி வஃபாத் ஆகி விட்டார். இவருக்கு குழந்தைகள் இல்லை. வளர்ப்பு மகன் இருந்தார். அந்த மகனுக்கு இரு பையன்கள் ஷாஸெப், ஷாஸென் ஷோசயீம். இவருடன் அவர்கள் லாஹூரில் வசித்து வருகின்றனர். ஜுமுஆவுக்குச் செல்லும்போது அதில் ஒரு பையன்தான் உடன் இருந்தான்.

அவரது ஒரு சகோதரர் இல்யாஸ் சாஹிப் பெர்மிங்ஹமில் வசிக்கிறார். அவர் கூறுகிறார்: மிகவும் பரிவு குணம் கொண்ட சகோதராக இருந்தார். தம்பிகளை அண்ணன் கவனிப்பது போலல்லாமல் தந்தையைப் போன்று கவனித்துக் கொண்டார். எமது தர்பிய்யத்தில் முக்கிய பங்கு வகித்தார். தொழுகை மற்றும் அதன் பொருள் குர்ஆன் ஓதுதல் அனைத்தையும் எமக்கு அவரே கற்றுத் தந்ததார். சிறிய சகோதர்களைக் கவனத்தில் வைத்துக் கொண்டார். கல்வி விஷயத்திலும் அவர் எமக்கு வழிகாட்டினார். பள்ளிக்கூடம் சென்று எமது ஆசிரியர்களை சந்திப்பார். எங்களைப் பற்றி கவலைப்படுவார். ஜமாஅத் நிகழ்ச்சிகளுக்கு மிகவும் எச்சரிக்கையுடன் எங்களையும் அழைத்துச் செல்வார். பல்வேறு அறிவுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு எங்களை தயார் செய்வார். ஜமாஅத்துடன் தொழுவதற்கு எங்களையும் அழைத்துச் செல்வார்.

இவ்வாறு ஒவ்வொரு சகோதரரும் தமது இளைய சகோதரர்களையும் பெற்றோர் தமது குழந்தைகளையும் அழைத்து வந்தால் பள்ளிகளில் மக்களின் வருகை பல மடங்கு அதிகமாக முடியும்.

மேலும் கூறுகிறார்: ஜமாஅத் கூட்டங்களில் எப்போதும் எங்களையும் அழைத்துச் செல்வார். இவர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் காலத்தில் ஒரு கனவு கண்டிருந்தார். ஷஹீது மர்ஹூமின் சகோதரர் கூறுகிறார்: இரண்டு நாட்களுக்குப் பிறகு எனக்கு திடீரென அது நினைவிற்கு வந்தது. அந்தக் கனவு இவ்வாறாக இருந்தது. அப்பகுதியில் அஹ்மதியல்லாத பள்ளியில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் வஃபாத் ஆகி விட்டார்கள் என்று அறிவிக்கிறார்கள். நான் வீட்டின் தபால் பெட்டியில் பார்க்கிறேன். அதில் ஒரு கத்தி கிடக்கிறது. அப்போது அதற்கு விளக்கமாக அவர் கூறியிருந்தார். கத்தியைப் பார்ப்பதன் பொருள் ஜமாஅத் தியாகங்கள் செய்ய வேண்டியது வரும். நான்காவது கலீஃபத்துல் மஸீஹின் மரணம் என்பதன் பொருள் அன்னாரது காலத்தில் ஜமாஅத்திற்கு முன்னேற்றம் ஏற்படும். அன்னாரின் வஃபாத் பற்றி தெருக்களில் முறைப்படி அறிவிப்பு செய்யப்படும் என்பதாகும்.

இது அவரது கருத்தின்படி விளக்கமாகும். எவ்வாறிருப்பினும் M.T.A மூலமாக அறிவிக்கப்பட்டது தான். கனவும் நிறைவேறி விட்டது. கத்தியைக் கண்டதன் பொருள் இவரது ஷஹாதத் ஆகும். அவர் தந்த விளக்கம் சரியானது என்றுதான் தோன்றுகிறது. ஷஹாதத்தே சுட்டிக் காட்டபப்ட்டது. அது நிகழ்ந்தும் விட்டது.

அவர் கூறுகிறார்: எமது சகோதரர் எம்மை முந்தி விட்டார். குடும்பத்தின் பெயரை ஒளிமயமாக்கி

விட்டார். ஷஹாதத்தின் பதவியை அடைந்து குடும்பத்தின் முதல் ஷஹீதாக ஆகி எமக்காக நிரந்தரமான முன்மாதிரியை விட்டுச் சென்று விட்டார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவருக்கு ஆறு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருக்கிறார்கள். அனைவருமே கிட்டத்தட்ட வெளியில்தான் இருக்கிறார்கள்.

இரண்டாவது ஜனாஸா இந்தியாவிலுள்ள கிழக்கு கோதாவரியின் முபல்லிக் இன்சார்ஜ் கண்ணியத்திற்குரிய H. நாஸிருத்தீன் சாஹிப் அவர்களுடையது. 7 ஏப்ரல் 2017 அன்று கோதாவரி நதியில் மூழ்கியதனால் தமது 42 –வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

விபத்து நடந்த அன்று அவர் சிக்கந்தராபாத் அமீர் சாஹிப் மற்றும் ஜமாஅத் சகோதரர்களுடன் சேர்ந்து வாங்கல்பூரி ஜமாஅத்தில் ஃபஜ்ர் தொழுது விட்டு ஆற்றுக்குச் சென்றார்கள். நன்றாக நீந்தத் தெரிந்தவர். அங்கு சகோதரர்களுடன் நீந்தும்போது காணாமல் போய் விட்டார். மீனவர்களின் உதவியுடன் ஒரு மணி நேரம் தேடிய பிறகு இவரது உடல் கொஞ்ச தூரத்தில் கரையில் கிடைத்தது. மர்ஹூமுடைய தந்தையார் S. ஷாஹுல் ஹமீது சாஹிப், காவாசேரி என்ற அவரது பகுதியில் முதல் அஹ்மதியாக இருந்தார். அவர் மூலமாகவே அங்கு ஜமாஅத் நிலைநாட்டப்பட்டது. அவரது கண்ணியத்திற்குரிய தாயார் சேலக்கராவின் ஆரம்பகால அஹ்மதிகளில் ஒருவராவார். மர்ஹூம் 2000 ஆம் ஆண்டு காதியானிலிருந்து படித்து முடித்து ஆந்திர மாநிலம் மற்றும் தெலுங்கானாவில் பல்வேறு இடங்களில் வெற்றி வாய்ந்த முபல்லிக் ஆக பணி செய்து வந்தார். சித்தக்குண்டாவின் பெரிய ஜமாஅத்திலும் பணி செய்தார். அவர் மிகவும் ஞானத்துடன் தர்பிய்யத் செய்து தனக்கு கீழுள்ள ஜமாஅத்துகளை பராமரித்து வந்தார். வஃபாத்தின் வேளையில் கிழக்கு கோதாவரியின் முபல்லிக் இன்சார்ஜ் ஆக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவரது மனைவி கூறுகிறார்: எத்தகைய சில இடங்களிலும் வசிக்க வேண்டியது வந்தாலும் ஜமாஅத் சென்டர் மட்டும் அங்கு இருந்தாலும் அங்கு மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துச் சென்று தொழுகை நடத்தி தர்ஸ் கொடுத்து வந்தார். இவரது இந்த வழக்கம் வஃபாத்திற்கு முந்தைய தினம் வரை தொடர்ந்தது. முரப்பி, முபல்லிக்மார்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கிறது. ஜமாஅத்தகள் தொலைதூரத்தில் இருக்கின்றன. ஒருவரும் வரவில்லை என்றாலும் கூட ஜமாஅத்துடன் தொழுகை நடைபெற வேண்டும். தமது வீட்டினரைச் சேர்த்துக் கொண்டு தொழ வேண்டும்.

பிறகு இவரது மனைவி கூறுகிறார்: காமாரெட்டி பகுதியில் நியமிக்கப்பட்டிருந்தார். அங்கு அவர் பிரசுரம் விநியோகம் செய்தபோது எதிர்ப்பு அதிகமானது. எதிரிகளால் பிடிக்கப்பட்டார். அவர்கள் நன்றாக அடித்து உதைத்தனர். அல்லாஹ்வின் அருளால் மட்டுமே மயிரிழையில் உயிர் பிழைத்தார்.

அதற்குப் பிறகு அவரது மனைவி கூறுகிறார்: இங்கு மிகவும் ஆபத்தான நிலை இருக்கிறது. பகைமை இருக்கிறது. எதிர்ப்பு இருக்கிறது. கேரளாவுக்கு மாற்றுமாறு விண்ணப்பம் செய்யுங்கள். ஏனெனில் இங்கு எதிர்ப்பு மிகவும் அதிகமாகி விட்டது என்று கூறியதற்கு அவர் பதில் கூறினார். நாம் மாற்றல் வாங்கிப் போய் விடுவோம். சரிதான். எதிர்ப்பை சான்று காட்டி தலைமையகத்திற்கு எழுதினால் தலைமையகம் மாற்றி விடும். நாம் போய் விடுவோம். ஆனால் இங்கிருக்கிற அஹ்மதிகளை எங்கு மாற்றுவது? அவர்களுக்கு எதிர்ப்பு அப்படியேதான் இருக்கும். எதிர்ப்பிற்கு பயந்து போவது சரியானதல்ல. நாம் நமது வக்ஃபின் உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும். வக்ஃப் செய்து வந்துள்ளோம். எந்த நிலை இருந்தாலும் நாம் இங்குதான் இருக்க வேண்டும் என்று கூறி வந்தார். அப்படியே ஷஹாதத்தின் வாய்ப்பு கிடைத்து விட்டால் பிறகு அதனை விட பெரிய வெகுமதி வேறென்ன இருக்கிறது? எனவே நாம் இங்கேயே தான் இருக்க வேண்டும் என்று கூறி வந்தார்.

அதே போன்று அவரது எளிமை எப்படி இருந்தது என்றால், அவரது மனைவி கூறுகிறார்: வீட்டிற்கு சொந்தமாக எந்த ஃபர்னிச்சர்களும் வாங்கியதில்லை. நாம் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். ஜமாஅத் சொல்லும் இடத்திற்கு நாம் செல்ல வேண்டியது உள்ளது. எனவே ஃபர்னிச்சர் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்கள் விரைவில் மாறுவதில் தடையாக இருக்கக் கூடாது என்றே எப்போதும் கூறி வந்தார். என்ன வசதிகளை ஜமாஅத் செய்து தந்துள்ளதோ அதற்குள் வாழ வேண்டும். அதனை போதுமானதாக்கிக் கொள்ள வேண்டும். வாழ்வை அர்ப்பணித்தவருக்கு இதுவும் ஒரு முன்மாதிரியாகும்.

கடந்த வருடம் அமலாப்புரம் பணியிட மாற்றம் செய்யப்பட்டது. அங்கு குழந்தைகளுக்கு திருக்குர்ஆன் ஓதித் தருவதற்கு எவ்வளவு சிரத்தை மேற்கொண்டார் என்றால் ஒரு கிலோ மீட்டர் சைக்கிளில் சென்று மக்களுக்கு குர்ஆன் ஓதிக் கொடுத்து விட்டு வருவார். முபல்லிக்கள் மற்றும் முரப்பிகளுக்கு இதுவும் ஒரு முன்மாதிரியாகும்.

பிறகு இவரது மனைவி கூறினார்: விருந்தோம்பலின் பெரும் சிறப்பு அவரிடம் இருந்தது. சிறுவர்களுக்கு பள்ளி விடுமுறை நாட்களில் கேரளா வருவதனால் வீட்டில் நான் (மனைவி) இருக்க மாட்டேன். விந்திருனர்கள் வந்தால் அப்போதும் கூட அவர் ஒருபோதும் சிரமத்தைக் காட்டியதில்லை. தானே உணவு சமைத்து விருந்தாளிக்கும் உணவளிப்பார். ஷஹாதத்திற்கான பெரும் விருப்பம் இருந்தது என்பதை முதலில் குறிப்பிட்டேன்.

அவர் கூறினார்: எனது மர்ஹூமான தந்தையையும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களையும் மீண்டும் மீண்டும் கனவில் பார்த்தேன். எனது தந்தையார் என்னிடம் சைகை செய்கிறார்; கூப்பிடுகிறார்கள் என்று மீண்டும் மீண்டும் கனவில் பார்த்தேன். எவ்வாறிருப்பினும், இவரது ஷஹாதத் எவ்வகையில் நடந்தாலும் மார்க்கத் தொண்டிற்காக சென்றிருந்தார். மார்க்க சுற்றுப் பயணத்தின் போதே வஃபாத்தும் நிகழ்ந்துள்ளது. விபத்திற்குள்ளாகி வஃபாத் நிகழ்ந்துள்ளது. இதுவும் ஒருவகை ஷஹாதத் ஆகும். அதிகமாக துஆ செய்பவரும், தஹஜ்ஜுத் தொழுபவரும், பழகுவதற்கு எளியவரும், தப்லீக் களத்தில் அஞ்சாத முஜாஹித் ஆகவும் இருந்தார். பலமுறை எதிரிகள் அவரை தமது ஆதிக்கத்தில் வைத்து அடித்து உதைத்துள்ளனர். அதை ஒருமுறை நான் ஜல்ஸாக்களின் சொற்பொழிவுகளில் கூறும் சம்பவங்களிலும் இவர் அடி வாங்கிய சம்பவத்தைக் கூறியுள்ளேன். மிகவும் பயங்கரமான முறையில் மல்லவிகள் அவரை அடித்தனர். இவரது வயது முதிர்ந்த தாயார் மற்றும் மனைவி, இரு மகன்கள் மற்றும் அண்ணன்கள் இருவரில் ஒருவர் பாலக்காடு மாவட்டத்தின் அமீர் H. சுலைமான் சாஹிப் ஆவார்கள். இன்னொரு சகோதரர் H. ஷம்சுதீன் சாஹிப் அவர்கள் நஷ்ரோ இஷாஅத் காதியானில் மலையாளம் பிரிவில் தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்று வருகிறார்.

இவருடன் தொண்டாற்றக்கூடிய வாய்ப்பு பெற்ற முபல்லிக் நவீதுல் ஃபதஹ் ஷாஹித் சாஹிப் கூறுகிறார்: மவ்லானா H. நாஸிருத்தீன் சாஹிப் கேரளாவைச் சார்ந்தவர். சுமார் 18 வருடங்களாக ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் தொண்டாற்றி வந்தார். கூறுகிறார்: ஒரே பகுதியில் வாழ்கின்ற காரணமாக அடிக்கடி சந்தித்துள்ளோம். கூட்டங்களில் மிகவும் பணிவுடன் அமர்ந்திருப்பார். அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்திற்காக எந்தப் பணியையும் செய்வதற்கு ஆயத்தமாக இருப்பார். மிகவும் அன்பு கொண்டவராக இருந்தார். செயல் உள்ள ஆலிமாக இருந்தார். தொடர்ந்து தஹஜ்ஜுத் தொழுவார். தினமும் முறையாக தஃலீம், தர்பிய்யத் செய்வார். அலுவலகப் பணிக்காக தினமும் நேரம் ஒதுக்குவார். பெரியவர்களை மதிப்பதும் இவரது சிறப்புப் பண்பாக இருந்தது. சிறியவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதும் இவரது சிறப்புப் பண்பாக இருந்தது. ஒவ்வொரு நாளும் வெளியில் செல்வார். எதிரிகள் என்ன செய்வார்களோ என்று பயம் கிடையாது. இதனால் இவருக்கு அஹ்மதி அல்லாதவரின் வட்டமும் பரந்ததாக இருந்தது. புன்சிரிப்புடன் அனைவரையும் சந்திப்பார். இவருக்கு ஒரு பிரபல்யம் கிடைத்திருந்தது. அனைவருக்கும் பிடித்தவராக இருந்தார்.

அவர் கூறுகிறார்: நான் இவரது நெற்றியில் கோபத்தைக் கண்டதில்லை. தம்முடன் உள்ள முஅல்லிம்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வார். எப்போதும் அவர்களை கவனித்துக் கொள்வார். சந்திக்கின்ற ஒவ்வொருவரும் அவரிடம் தம்மை அர்ப்பணித்து விடுவார். அந்த அளவுக்கு ஒவ்வொருவருடனும் அன்பு காட்டக் கூடியவர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களை மிகவும் கருத்தூன்றி படிப்பார். முறையாக படிப்பார். அதற்காக ஒரு நேரத்தை வைத்துக் கொள்வார். இதுவும் ஒவ்வொரு முரப்பி மற்றும் முபல்லிக்கிற்கு மிகவும் அவசியமான பாடமாகும். திருக்குர்ஆன் திலாவத் செய்வதிலிருந்து ஒருபோதும் கவனமற்றிருக்க மாட்டார்.

தினமும் முறைப்படி டைரி எழுதுவார். எப்போதும் கிலாஃபத்தின் தரப்பிலிருந்து சொல்லப்படும் கருத்துக்களை நினைவில் வைத்திருப்பார். குத்பாக்களை எப்போதும் ஆழ்ந்து கேட்பார். கேட்பதுடன் முழுமையாக செயல்பட வேண்டும் என்று முயற்சி செய்வார். எந்த சமாளிப்புகளையும் எடுத்து வைக்கக் கூடாது என்று முயற்சி செய்வார். ஒவ்வொரு சொல்லையும் செயல்படுத்த முயற்சி செய்வார். இதுவும் வாழ்வை அர்ப்பணித்தவருக்கு மிகவும் முக்கியமான விஷயமாகும். கிலாஃபத்துடன் அளவு கடந்த அன்பு கொண்டவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது நேசமும் பிரியமும் அளவு கடந்து இருந்தது.

அவர் கூறுகிறார்: இவை இவரிடம் காணப்பட்ட சிறப்புகளாகும். பிறர் காணத்தக்க வகையில் இந்தப் பண்புகள் அவரிடம் இருந்தன. கமாரெட்டியில் எதிரிகள் இவரை பிலால் மஸ்ஜிதிற்குப் பிடித்துக் கொண்டுபோய் நன்றாக அடித்து விட்டார்கள். பொறுமையுடன் அடியை வாங்கிக் கொண்டார். பின்வாங்கவில்லை.

முரப்பி சாஹிப் கூறுகிறார்: இவர் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். போலீஸ் விசாரணைக்காக அழைக்கப்பட்டது. நான் இவரை மருத்துவமனையில் சென்று பார்த்தேன். காயங்களில் பேண்டேஜ் கட்டுகள் போடப்பட்டிருந்தன. ஆனால் முகத்தில் மட்டும் ஓர் ஆன்மீக புன்னகை இருந்தது. மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். தானே எல்லா சம்பவத்தையும் கூறினார். எதிரிகள் கேட்டனர். மிர்ஸா குலாம் அஹ்மது என்ன வாதம் செய்தார்.

நிழலான நுபுவ்வத் பெற்றிருந்ததாக வாதம் செய்தார் என்று இவர் கூறினார். உடனே எதிரிகள் இன்னும் அதிகமாக அடித்தனர். அடித்து அடித்து பிறகு மீண்டும் நிழலான நுவுப்பத் என்றால் என்ன? என்று கேட்டனர். இவர் கூறினார்: ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது பேரன்பில் திளைப்பதன் மூலம் ஒரு நுபுவ்வத் கிடைக்கிறது. அந்த நுபுவ்வத் தான் அது. எதிரிகள் மீண்டும் அடித்தனர். எவ்வாறிருப்பினும், மிகவும் நன்றியுணர்வுடன் இந்த சம்பவங்களையெல்லாம் கூறி வந்தார். இறைவனது மார்க்கத்திற்கு தொண்டு செய்ததில் எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. அளவில்லாமல் அடிவாங்கு –வதற்கு வாய்ப்பு கிடைத்தது என்று கூறுவார்.

இந்த முரப்பி – இதனை எழுதுபவர் கூறுகிறார்: எனக்கு மாறுதல் கிடைத்த போது கூறினார். உங்களுக்கு அங்கிருந்து மாறுதல் ஆகிறது. ஆனால் எதிரிகளின் இடத்திற்கு செல்லும்போது மிகவும் ஞானத்துடன் பணி செய்ய வேண்டும். அதற்கு அங்கு அதிக வாய்ப்பு கிடைக்கும். பிறகு மேலும் எவ்வாறு எதிர்ப்பு வருகிறது. எவ்வாறு தப்லீக் செய்ய வேண்டும் என்றெல்லாம் எனக்கு புரிய வைத்தார். பின்னால் வருபவர்களின் தைரியத்தையும் அதிகப்படுத்தினார். அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை கொண்டு சேர்ப்பதாயின் துணிச்சலுடன் கொண்டு சேர்க்க வேண்டும். பயப்படக்கூடாது என்பார்.

வசீர் சாஹிப் என்ற ஒரு முஅல்லிம் சாஹிப் கூறுகிறார்: நான் இவரை எப்போதும் தஹஜ்ஜுத் தொழுபவராகவும், மிகவும் இறையச்சத்துடன் தொழுபவராகவும், தினமும் குர்ஆன் ஓதுபவராகவும், மிகவும் நல்லியல்பு கொண்டவராகவும், செயல்படும் ஆலிமாகவும், கிலாஃபத்துடன் அளவற்ற அன்பு கொண்டவராகவும் கண்டேன். தொழுகையை ஜமாஅத்துடன் தொழுவதில் கவனம் செலுத்தினார். நல்ல விருந்தோம்பலும், எளிமையை விரும்புதலும், வீணான செலவுகளைத் தவிர்த்தலும் இவரிடம் இருந்தன. மேலும் எழுதுகிறார்: இவருக்கு வாசிப்பதில் நல்ல ஆர்வம் இருந்தது. முதலில் குறிப்பிடப்பட்டது. ஏதாவது கேள்வி கேட்டால் மிகச் சிறப்பான முறையில் பதிலளிப்பார். பெரும்பாலும் ஏதாவது நிகழ்ச்சிகள் அல்லது சபையில் குறிப்பாக பயணத்தில் குத்தாமுடன் அமர்வார். ஜமாஅத்தைப் பற்றிய குறிப்புகளை ஈமானை வலுவூட்டும் சம்பவங்களையும் கூறிக் கொண்டிருப்பார். ஒவ்வொருவருடனும் நல்லொழுக்கத்துடன் பழகுவார். அதனால் ஒவ்வொருவரும் அவருடன் இருப்பதை விரும்புவர்.

அவர் கூறுகிறார்: ஒருமுறை காமரெட்டியில் பிரசுரம் விநியோகித்தபோது எதிரிகள் இவரை தாக்குவதற்கு திட்டமிட்டனர். 20 பிப்ரவரி அன்று முஸ்லிஹ் மவ்வூது தினமாக இருந்தது. இவர் தொழுகை மையத்தைச் சென்றடைந்து விட்டார். அப்போது 100 பேர் கொண்ட அஹ்மதி அல்லாத –வர்களின் குழு ஒன்று அவரைத் தேடி வந்தத. இவர் முதலிலேயே பள்ளியை வந்தடைந்து விட்டதால் வழியில் இவரை சந்திக்க முடியவில்லை. இந்த எதிரி மவ்லவிகள் ஒரு வழிமுறையைக் கையாண்டனர்.

நமது முஹம்மது உமர் சாஹிப் என்ற நமது ஜமாஅத் முஅல்லிமும் அவரது மனைவியும் இரு குழந்தைகளும் சென்று கொண்டிருந்தனர். தொழுகை மையத்தில் நடைபெறவிருந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்தார். எதிரிகள் அவர்களை வழியில் பிடித்து நிறுத்தினர். H. நாஸிருத்தீன் எங்களுக்கு முன்னால் வராத வரை நாங்கள் விட மாட்டோம் என்றனர். மர்ஹூமுக்கு இது தெரிய வந்ததும் உடனே அங்கு சென்றார். நான் நாஸிருத்தீன் என்று அவர்களிடம் கூறினார். உடனே அவர்கள் அந்த முஅல்லிம் சாஹிபையும் அவரது மனைவி மக்களையும் விட்டு விட்டனர். இவரை அடித்து இழுத்துக் கொண்டு சென்றனர். பலமாக அடித்தனர். இறுதியில் போலீஸ் மூலமாக இவர் மீட்கப்பட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதத்தை மறுத்து விடுங்கள். அதனை பொய்யாக்குங்கள் என்பதே அவர்களின் தீவிரத்திற்கு காரணமாக இருந்தது. அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது சந்ததிகளுக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு கண்ணியத்திற்குரிய சாஹிப் ஸாதி அமத்துல் வஹீத் பேகம் சாஹிபா உடையதாகும். இவர் சாஹிப் ஸாதா மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிபுடைய மனைவியாவார். 10 ஏப்ரல் 2017 இரவு 10.00 மணிக்கு சுமார் 82 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் உடைய கடைசி மகள் ஆவார்கள். எனது மாமியும் ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பேத்தி ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் உடைய மகள்வழிப் பேத்தியாவார்கள். ரப்வாவிலுள்ள பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இருமுறை மிகவும் பயங்கரமான நோயுடன் வாழ்ந்தார்கள். மிகவும் பொறுமையுடனும் தைரியத்துடனும் நோயைச் சகித்துக் கொண்டார்கள். டாக்டர் நூரி சாஹிப் இவர்களைப் பற்றி எழுதியுள்ளார்கள். ஏறக்குறைய கடந்த 20 வருடங்களாக நோயுற்றிருந்தார். மார்க்கத்தின் நன்மையின் உயர் முன்மாதிரியாக இருந்தார்கள். நோயின் தொந்தரவுகளை மிகவும் தைரியத்துடன் சகித்துக் கொண்டார்கள். கேன்ஸர் நோயாக இருந்தது. அது உடலளவிலும் மன அளவிலும் பயங்கரமான நிலைக்கு எடுத்துச் செல்லக் கூடியதாகும். கடைசி நாட்களில் இந்நோய் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் ஆபத்தாக இருக்கிறது. சிகிச்சையும் மிகவும் வேதனை தரக்கூடியது. இவற்றிக்குப் பிறகும் அல்லாஹ் வழங்கிய ஆற்றல் மற்றும் பொறுமையுடன் இந்த நோயை தனது அன்றாட வாழ்வில் தைரியம் மற்றும் பொறுமையுடன் அவர்கள் எதிர்த்து நின்றார்கள்.

டாக்டர் சாஹிப் எழுதுகிறார்: சிரித்தவாறு எந்தப் பயமுமினறி பணிகளைச் செய்து வந்தார். இறைவனின் திருப்தியில் திருப்தி கொண்டிருந்தார். தமது நோயின் கடைசி நாட்கள் வரை வீட்டைப் பராமரித்து வந்தார். அத்துடன் தமது கணவரையும் கவனித்து வந்தார். கணவருடன் முன்மாதிரியான ஒரு தொடர்பிருந்தது. தாமே நோயுற்ற நிலையிலும் கூட இவருடைய கணவர் சாஹிப் ஸாதா மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப் அவர்களுக்கு ஆஞ்சியோ பிளாஸ்ட் செய்திருந்த போது தமது நோயை மறந்து விட்டு அவர்களை கவனித்துக் கொண்டார்கள்.

விருந்தோம்பலின் பண்பு அவர்களிடம் மிகவும் சிறப்பாக இருந்தது. எந்த நேரத்தில் எவர் வந்தாலும் விருந்தோம்பல் செய்வார். மாநாட்டு வேளையிலும் அந்நிய விருந்தினர்களும் கூட வருவர். ஷூராவுக்காக வரும்போதும் சரி மக்கள் அதிகம் வருவார்கள். அவர்களை எப்போதும் கவனித்துக் கொள்வார்கள். நோயிற்குப் பிறகும் கூட இங்கு இலண்டனுக்கும் கூட இருமுறை வந்துள்ளார்கள். என்னையும் சந்தித்துள்ளார்கள். 2005 –ல் காதியானில் வைத்து கிலாஃபத்திற்குப் பிறகு என்னை முதலில் சந்தித்தார்கள். பிறகு இங்கே வந்திருந்த போதும் சந்தித்தார்கள். கிலாஃபத்துடன் அவர்களின் தொடர்பு மிகவும் பற்றுமிக்க விசுவாச தொடர்பாக இருந்தது. என் உறவினராக இருந்தும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தும் மிகவும் பணிவுடன் சந்தித்தார்கள்.

எமது தாயாருடன் மைனி உறவு இருந்தது. ஆனால் வயதின் அடிப்படையில் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிபின் கடைசி மகளாக இருந்ததால் எனது சகோதரியும் இவரும் கிட்டத்தட்ட ஒரே வயதினராக இருந்தனர். இந்த அடிப்படையில் எனது தாயார் தமது குழந்தைகளைப் போன்றே இவரையும் நடத்தினார்கள். அவர்களும் கூட இவர்களை ஒருபோதும் தமது மைனியாகக் கருதவில்லை. மாறாக நான் எப்போதும் பார்த்துள்ளேன். மிகவும் மரியாதையுடன் நடத்தினார்கள். எனது தாயாரைப் பெரியவராகக் கருதினார்கள். மிகவும் முன்மாதிரியான தொடர்பாக இருந்தது. இவர்களது திருமணத்தை 26 டிசம்பர் 1956 –ல் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நடத்தினார்கள். இவர்களுடன் மீர் செய்யது மஹ்மூது அஹ்மது சாஹிபுடைய திருமணம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மகள் சாஹிப் ஸாதி அமத்துல் மதீன் சாஹிபா அவர்களுடனும், பிறகு சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபுடைய ஒரு மகளின் திருமணம் டாக்டர் இஃஜாஸுல் ஹக் சாஹிப் அவர்களுடன் நடந்தது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 26 டிசம்பரில் மாநாடு ஆரம்பமாகும் முன் கூறினார்கள். துஆவுக்கு முன்னால் நான் சில நிகாஹ்களை அறிவிக்கப் போகிறேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பொதுவாக திருமணங்கள் ஜல்ஸா முடிந்த பிறகு 29 டிசம்பரில்தான் நடத்தப்படும். ஆனால் இந்த திருமணங்களில் சில விதிவிலக்குகள் உள்ளன. ஒன்று எனது மகள் அமத்துல் மதீன் உடைய திருமணம் செய்யத் மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்களுடன் நடக்கின்றது. இவர்கள் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிபின் மகனாவார்கள். இரண்டாவது திருமணம் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் மகளுடையதாகும். மூன்றாவது அமத்துல் வஹீத் பேகம். இவர் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் சாஹிபின் மகள். இவரது திருமணம் மிர்ஸா குர்ஷீது அஹ்மத் சாஹிபுடன் நடைபெறுகிறது. இவர் மிர்ஸா அஸீஸ் அஹ்மத் சாஹிபின் மகனாவார். மிர்ஸா குர்ஷித் அஹ்மத் சாஹிப் வாழ்வை அர்ப்பணித்தவர்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள். இவர் இப்போது படித்துக் கொண்டிருக்கிறார். பிறகு இவர் தம்மை வக்ஃப் செய்ய உள்ளார். பிறகு முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது துஆவின் வார்த்தைகளை கூறினார்கள். அல்லாஹ் இந்த எல்லா நிகாஹ்வையும் பரக்கத்துக் –குரியதாக்குவானாக! உலகியல் ரீதியாகவும், வருங்காலத்தில் இயக்கத்தின் ஆற்றலின் அடிப்படை இந்த நிக்காஹ்வின் மூலம் உருவாகட்டுமாக!

அல்லாஹ்வின் அருளால் அவர்களுக்கு அல்லாஹ் 6 மகன்களை வழங்கினான். அவர்களுள் 4 மகன்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். இருவர் டாக்டர்கள். ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் பணி செய்கிறார்கள். ஒருவர் Ph.d டாக்டர். நஸாரத் தஃலீமில் இருக்கிறார். ஒருவர் வக்கீலாக இருக்கிறார். சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவில் சட்ட ஆலோசக அலுவலகத்தில் பணியாற்றுகிறார். இவர்களது பணிக்காலம் லஜ்னாவில் சுமார் 29 ஆண்டுகள் பரந்துள்ளது. கைவினை மற்றும் வணிகத்துறைச் செயலராகவும், நாயிப் சத்ர் அவ்வல் ஆகவும் இருந்தார். சனஅத்தோ திஜாரத்தில் செகரட்டரியாக இருந்தபோது அவர்களின் ஆர்வம் மிக நன்றாக இருந்தது. ஏழைகளைப் பணி செய்ய

வைப்பார். பின்னல் வேலை மற்றும் தையல் வேலைகளைச் செய்ய வைப்பார். அதனால் ஏழைகளுக்கு கூலியும் கிடைத்தது. கண்காட்சியில் எப்போதும் ரப்வாவின் லஜ்னாக்களின் வருகை கனிசமான இருந்தது. இந்த அடிப்படையில் கூட மேலதிகாரி –களுக்குக் கட்டுப்படுதல், அதிலும் அவர் என்ன உறவினராக இருந்தாலும் வயது வித்தியாசம் இருந்தாலும் கட்டுப்படுவார்.

எனது மனைவி கூறியுள்ளார்: அவர்கள் 2 வருடங்கள் ரப்வாவின் சத்ர் லஜ்னாவாக இருந்த போது இவர் செகரட்டரி சஅனத்தோ திஜாரத் கைவினைப் பொருட்கள், மற்றும் வஸிய்யத் துறை மற்றும் நாயிப் சத்ர் ஆக பணியாற்றினார். எப்போதும் மனமகிழ்வுடனும் பணிவுடனும் கட்டுப்படுதலுடனும் பணி செய்தார். எப்போது அவரிடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டாலும மிகவும் மகிழ்ச்சியுடன் அதனை நிறைவேற்றினார்.

கணவர் கண்ணியத்திற்குரிய மிர்ஸா குர்ஷீது அஹ்மத் சாஹிப் கூறுகிறார்: ஒரு வாழ்வை அர்ப்பணித்தவரின் மனைவியின் கடமையை நிறைவேற்றினார். என்னிடம் எதனையும் கேட்டதில்லை. பிள்ளைகளின் தர்பிய்யத்தை கவனித்துக் கொண்டார். அந்த தர்பிய்யத்தின் விளைவால் அல்லாஹ்வின் அருளால் 6 மகன்களில் 4 பேர் வாழ்வை அர்ப்பணித்தவர்களாக இருக்கின்றனர். பிறகு தமது பிள்ளைகளுடன் சேர்த்து வீட்டில் உள்ள பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் நல்ல முறையில் பராமரிப்பை வழங்கினார்கள். திருக்குர்ஆன் ஓத வைத்தார்கள். வயதின் அடிப்படையில் பெரிய குழந்தைகளை முதலில் பார்த்து ஓதவும் பிறகு பொருளையும் கற்பித்தார்கள்.

அவர்கள் எழுதுகிறார்கள்: தாம் கல்லூரில் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு கனவில் பார்த்தார். மியான் அப்துர் ரஹ்மான் சாஹிப் ஆகிய அன்னாரது மாமா மாலியோ கோட்லாவைச் சார்ந்தவர். மிகவும் நல்ல பளிச்சென்ற ஒரு தங்க வளையலை ஏதோ ஒரு பெண் மூலம் கொடுத்து அனுப்புகிறார். அத்துடன் 65–82 என்று கூறுகிறார். அந்த பெண் அந்த வளையலை தந்து விட்டு கூறுகிறார். 65–82 என்று கூறுகிறார். இவர் உறுதிப்படுத்துவதற்காக திரும்பவும் கேட்கிறார். திரும்பவும் 65–82 என்று கூறுகிறார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதுபற்றி எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 1965 –ல் இரண்டாவது கலீஃபாவின் வஃபாத் நிகழ்ந்தது. 1982– ல் மூன்றாவது கலீஃபாவின் வஃபாத் நிகழ்ந்தது. இவரது மகன் அதீல் சாஹிப் எழுதுகிறார்: ஆண்டு மாநாட்டின் போது நூற்றுக்கும் அதிகமான விருந்தாளிகள் வீட்டில் இருப்பார்கள். அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் விருந்தோம்பல் செய்வார்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹிஜ்ரத் செய்தபோது அவர்களது பயணத்திற்கான தேநீர் மற்றும் பிற பொருள்களை அன்னாருக்கு பிடித்த சில பொருட்களையும் தமது கண்காணிப்பின் கீழ் ஏற்பாடு செய்வார்கள். அன்னாருக்குப் பிடித்த சில பொருட்களை உருவாக்கி அனுப்பி வைத்தார். இவ்வாறு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் இடம் செய்த அதே நடைமுறைகளை என்னிடம் காட்டினார்கள். விசேஷமான ஒரு வகை அல்வாவை சமைத்து அனுப்பி வைப்பார்கள். தமது கைகளால் தமது கண்காணிப்பின் கீழ் செய்து அனுப்புவார்கள். கண்ணியமும் மரியாதையும் இருந்தது. தமது தாயாருக்கும் நிறைய சேவை செய்தார். தமது மாமானாருக்கும் மாமியாருக்கும் நிறைய சேவை செய்தார். தமது அண்ணிமார்களை தமது சிறிய குழந்தைகளைப் போன்று கவனித்துக் கொண்டார். திருக்குர்ஆன் ஓதுவதிலும் தொழுகைகளிலும் நல்ல பேணுதல் இருந்தது. பிள்ளைகளையும் சுபுஹ் தொழுகைக்குப் பிறகு திருக்குர்ஆன் ஓதுமாறு அமர்த்துவார்கள். ஏழைகளை கவனித்துக் கொள்வதும் பணியாளர்களை கவனித்துக் கொள்வதும் அதிகமாக இருந்தது. நான் ஏற்கனவே கூறினேன். ஒரே வீட்டில் வாழ்ந்த காரணத்தால் என்னுடன் மிகவும் சகஜமாக பழகுவார்கள்.

ஆனால் கிலாஃபத்திற்குப் பிறகு இவரது மகன் எழுதுகிறார்: முதலில் தாமே உறுதியாக பணிகளைச் செய்ய வைத்து வந்தார். அதாவது நான் அங்கு செய்து வந்த பணிகளை எவ்வாறு செய்ய வைப்பது? அந்த நிலங்களின் விவகாரங்கள் ஆகிய விஷயங்களின் நானே அவர்களுக்கு ஆறுதல் கூறினேன். அதற்கு பிறகிருந்து எந்த வகை வேண்டுகோள்களும் வைக்கவில்லை. நான் என்ன சொன்னேனோ அதனை மட்டுமே செய்து வந்தார். அதில் திருப்தி கொண்டார்.

இவர்களது ஓர் அண்ணி எனது சகோதரரின் மனைவி ஆவார். அவர் எழுதுகிறார்: ஒரு தாய் தமது குழந்தைகளுடன் உள்ள தொடர்பு போன்று எங்களுடன் இவர்களுக்கு தொடர்பு இருந்தது. தாயாரின் மரணத்துக்குப் பிறகு எங்கள் அனைவரையும் கவனத்தில் கொண்டார். எனது திருமணத்தில் நகை, சீர், அனைத்தையும் தாமே செய்ய வைத்தார். தாய் தமது மகள்களுக்கு செய்வது போன்று திருமணத்திற்குப் பிறகு ஒவ்வொரு பெருநாளிற்கும் தாய் தமது பெண்களுக்கு அனுப்புவது போன்று பெருநாள் பரிசு அனுப்புவார். பல சிறுமிகளை தமது வீட்டில் வைத்து பராமரித்து அவர்களுக்கு மார்க்க, உலகியல் பயிற்சிகளைக் கவனத்தில் கொண்டார். ஏழைப் பெண்களுக்கு இதனை செய்தார். அவர்களுள் ஒருவர் அவரது பணிப்பெண்ணின் மகள். அவரை தாமே பராமரித்து வந்தார்கள். அவரது திருமணத்தின்போது அவரது அண்ணிகளான எம் அனைவரையும் அழைத்து கூறினார். இந்த பெண்ணின் திருமணத்தில் நீங்கள் கலந்து கொள்ள வில்லையெனில் நான் உங்கள் மகள்களின் திருமணத்தில் கலந்து கொள்ள மாட்டேன் என்றார். இவ்வாறு சகோதரத்துவத்தை வெளிப்படுத்தினார்.

இவரது கடைசி அண்ணி எழுதுகிறார்: நான் ஒருமுறை அவரிடம் எந்த வயதில் நீங்கள் தஹஜ்ஜுத் தொழ ஆரம்பித்தீர்கள் என்று கேட்டேன். பதில் சொல்லவில்லை. தட்டிக் கழிக்க விரும்பினார். மீண்டும் மீண்டும் அடம்பிடித்த போது 12 வயதில் இருந்து முறைப்படி தொழுது வருதவாக கூறினார். அதேபோன்று பல பெண்களின் சீர்வரிசைகள் நகைகளுக்கான செலவை ஏற்றுக் கொண்டார்கள். லஜ்னாவின் நிதியிலிருந்தும் வர வைப்பார்கள். திருமணத்திற்கு சில பொலிவுகள் உள்ளன. ஆனால் சில ஏழைப் பெண்களின் திருமணத்தில் அவர்களுக்காக கேட்பவர் யாரும் இல்லை எனில் அவர்களின் உணவுகளுக்கும் ஏற்பாடு செய்வார்கள். இவர்களின் கிலாஃபத்தின் மீதுள்ள நேசம் பற்றி ஒரு சம்பவம். மியான் பஷீர் அஹ்மத் சாஹிப் உடைய மருமகள் எழுதுகிறார்: ஒருமுறை அங்கு சிறிது தேன் பாட்டில் இருந்தது. எனக்குத் தாருங்கள் என்று கேட்டேன். இதனை எனது கலீஃபா எனக்கு அனுப்பி உள்ளார். இதனை தர இயலாது. இதுபோன்று இன்னொரு பாட்டில் உள்ளது. அதை எடுத்துக் கொள் என்றார்கள். ஆறு மருமகள்கள். அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொருவருடனும் மிகச் சிறந்த நடைமுறை இருந்தது. ஒவ்வொருவரையும் மகள்களைப் போன்று வைத்துக் கொண்டார்கள். சிறிய மருமகள் இலண்டனில் இருக்கிற டாக்டர் அஹ்மதுல்லாஹ் சாஹிபுடைய மகளாவார். அவரது மனைவியும் தற்போது நோயுற்றிருக்கிறார். அதற்காக இந்த மருமகள் அதிய்யாவிற்கு இலண்டன் வரவேண்டியது வந்தது. தாமே நோயுற்ற நிலையில் அங்குபோய் உமது தாயாரை கவனித்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளை இங்கே விட்டு விட்டுச் செல்லுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறினார். மிகவும் கஷ்டம் ஏற்பட்ட நிலையிலும் மிகவும் பொறுமையுடன் ஒவ்வொரு வேலையையும் செய்தார்கள்.

எனது சிறிய சகோதரி எழுதுகிறார்: பணிப்பெண்களிடம் வேலை வாங்கும்போது கூட மிகவும் அமைதியாக வேலை வாங்குவார்கள். கண்காட்சிகளில் டியூட்டி தரும்போது ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டு விட்டாலும் கடுமை காட்ட மாட்டார்கள். பொறுமையுடன் பணி செய்வார்கள். இதனால் லஜ்னா பெண் உறுப்பினர்கள் இவர்களுடன் சேர்ந்து பணி செய்வதை விரும்பினார்கள். நிர்வாக விவகாரங்களின் மிகவும் சரியாக இருந்தார். எவருக்காவது கஷ்டம் ஏற்பட்டால் பணி செய்யும் பெண்களுக்கு கஷ்டம் ஏற்பட்டால் உடனே அதனை அகற்ற முயல்வார்.

எமது சிறிய சகோதரி அமத்துல் குத்தூஸ் சாஹிபா எழுதுகிறார்: மனிதனது செயலில் கூடுதல் குறைவு இருக்கும். ஆனால் இவர்களது பழக்கம் இவ்வாறே இருந்தது. அதாவது திருக்குர்ஆன் ஹதீஸ் உடன் மிகவும் தொடர்பு இருந்தது. நன்மை இவரது இயல்பில் சேர்ந்த ஒன்றைப் போன்றே இருந்தது.

எப்போதும் நமது போதனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் மாற்றமான பேச்சு நடந்தால் வெளிப்படையாகவே அதற்கு எதிராகப் பேசி விடுவார். கடைசி குழந்தையாக இருந்ததால் சிறு வயதில் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டார். இருந்தும் மிகவும் பணிவு காணப்பட்டது. எப்போதும் பணிவுடன் ஒவ்வொருவரையும் சந்தித்தார்.

எமது பெரிய சகோதரி எழுதுகிறார்: அமத்துர் ரவூஃப் சாஹிபா நாடு பிரிவினைக்குப் பிறகு மாடல் டவுனில் வசித்து வந்தார். அப்போது மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் அவர்கள் முறைப்படி திருக்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றை குழந்தைகளுக்கு கற்பித்து வந்தார்கள். எல்லாரையும் ஒன்று கூட்டி படிப்பித்து வந்தார்கள். அதற்குப் பிறகு இப்போது வஃபாத் ஆன எமது மாமி அமத்துல் வஹீத் சாஹிபாவிற்கு எத்தகைய விழிப்புணர்வு ஏற்பட்டது எனில் அவர்கள் தாம் படித்து விட்டு பிள்ளைகளுக்கு படிப்பித்தார்கள். ஒரு குழந்தைக்கு நாவில் பிரச்சனையிருந்தது. மணிக்கணக்கில் அமர்ந்து திருக்குர்ஆனை மீண்டும் மீண்டும் அக்குழந்தைக்கு ஓதிக் கொடுத்தார்கள். அல்லாஹ்வின் அருளால் பிறகு அவருக்கு அந்த பிரச்சனை இருக்கவில்லை. நல்ல பேசக்கூடியவராக இருக்கிறார்.

எனது சகோதரி எழுதுகிறார்: மெட்ரிக்கிற்குப் பிறகு F.A ரப்வாவில் படித்தார். தஹஜ்ஜுத்திற்கு பிறகு தமது படிப்பை தொடங்கி விடுவார். தொழுகையில் எப்போதும் கவனம் செலுத்தி வந்தார். அதுபோன்று மற்றவர்களும் எழுதி உள்ளனர்.

இவரது மகனும் எழுதி உள்ளார். உங்களுடன் கிலாஃபத்துக்கு முன்னால் இருந்த தொடர்பு வேறு. அதன் பிறகு கூற தொடங்கினார். சகோதரர் மகன் என்ற உறவு முடிந்து விட்டது. இப்போது கிலாஃபத் என்ற உறவு மட்டுமே எஞ்சியுள்ளது. இங்கு வந்தாலும் என்னை சந்திக்க வந்தால் உட்கார்ந்திருப்பவர்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

## கனடாவிலுள்ள அய்வானே தாஹிரில் 22 அக்டோபர் 2016 -ல் நடைபெற்ற அமைதிக் கருத்தரங்கில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட, கருத்தரங்கில் கலந்து கொண்ட கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் தாக்கங்கள்.

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

◗ கிர்ஷா என்ற ஒரு விருந்தினர் தமது எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்தினார்:

நான் இங்கு வந்திருப்பது எனது கண்ணியத்திற்கும் பெருமைக்கும் காரணமாக இருக்கின்றது. அமைதி என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட இந்த சொற்பொழிவு மிகவும் நன்றாக இருந்தது. நாங்கள் தொலைகாட்சியில் பல சொற்பொழிவுகளையும் கேட்கின்றோம். அதிர் போர், சண்டை மற்றும் வெறுப்பின் விஷயங்களே பரப்பப்படுகின்றது. எனவே அன்பு மற்றும் அமைதியை விரும்புகின்ற இந்த விஷயங்களை கேட்டு எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

◗ ஷாயினியல் என்ற ஒரு விருந்தினர் தமது எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்தினார்:

இங்கு வந்து நான் மிகவும் மிகிழ்ச்சி அடைந்தேன். நீங்கள் எனக்கு அழைப்பு விடுத்திருப்பது எனது பெருமைக்கு காரணமாக இருக்கின்றது. நாம் எவ்வாறு ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதை பற்றித்தான் சொற்பொழிவில் கூறப்பட்டது. இன்னும் அதிகமான மக்களும் கூட இந்த தூதுச்செய்தியை கேட்க முடியும் என்று நான் நம்புகின்றேன்.

◗ அனீதா ஸம்ரா என்ற விருந்தினர் தமது எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்தினார்:

கலீ∴பா அவர்களின் சொற்பொழிவை கேட்பதற்கும் ஒரு இஸ்லாமிய சமுதாயத்தை பார்ப்பதற்குமுள்ள ஒரு அரிய சந்தர்ப்பமாக அது இருந்தது. எனக்கு மிகவும் மகிழ்ச்சியை தருவதற்கு இது காரணமாக இருக்கின்றது. ஹுஸூர் அவர்களிடமிருந்து ஆட்டோகிரா∴ப் (கையெழுத்து) பெறுவதற்கான சந்தர்ப்பமும் எனக்கு கிடைத்தது.

◗ ஹியூகோர்ட்னி என்ற டிசைனர் தமது கருத்துக்களை இவ்வாறு கூறினார்:

ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. நான் மிகவும் மகிழ்ச்சியாகவும் தாக்கத்திற்கு ஆளாகியும் இருக்கின்றேன். கலீ∴பாவிடம் ஒரு திகில் இருக்கின்றது. நான் அவர்களுக்கு அருகில் சென்றபோது ஒரு நடுக்கம் என்னை ஆட்கொண்டது. எனவே நிச்சயமாக அவர்களிடம் (தூய்மைபடுத்து -கின்ற) ஒரு ஆற்றல் இருக்கின்றது. ஹுஸூர் அவர்கள் ஒரு பணிவுள்ள மனிதராக இருக்கின்றார்கள். இந்த பணிவை மனிதன் உணர முடியும்.

◗ உகண்டா மிஸ்ட்ரஸ் சர்சின் உறுப்பினரான ∴பிரான்ஸிஸ் அதா அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவிக்கின்றார்கள்:

கலீ∴பா அவர்கள் தமது சொற்பொழிவில் எல்லோரிடத்திலும் அன்பு என்ற இந்த கூற்றை நாம் எவ்வாறு நமது வாழ்வின் ஓர் அங்கமாக ஆக்க முடியும் என்பதை பற்றி கூறினார்கள். அவர்கள் சுயமே தனது செயல் மூலமாக எவ்வாறு நாம் இதற்கு ஏற்ப செயல்பட முடியும்? என்பதை நமக்கு காட்டியுள்ளார்கள். அவர்கள் இஸ்லாமிய போதனைகளை எடுத்து கூறினார்கள். அதன் மூலம் இஸ்லாம் தொடர்பாக ஊடகங்களில் கூறப்படுகின்ற விஷயங்கள் பொய்யானவை என்பதும் எந்த விஷயங்களை கலீ∴பா அவர்கள் கூறினார்களோ அவை உண்மையானவை என்பதும் தெளிவாக தெரிந்தவிட்டது. மேலும் ஒரு உண்மையான முஸ்லிம் மற்றவர்களைக்கூட பாதுகாப்பவராக இருக்கின்றார் என்பதும் தெளிவாக தெரிந்துவிட்டது.

◗ PC Youth Association -யைச் சார்ந்த ஜேக் கிரேன் பாக் ஓன்டாரியோ அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவிக்கின்றார்:

கலீ∴பா அவர்களின் சொற்பொழிவு உணர்வுகளால் நிரம்பி இருந்தது. அதன் காரணமாக எனக்கு மிகுந்த உற்சாகமும் தைரியமும் ஏற்பட்டது. அவர்கள் தமது சொற்பொழிவில் உலகில் அமைதியை நிலைநாட்டுவது பற்றி எடுத்து கூறினார்கள். எனது கருத்தின்படி கலீ∴பா அவர்கள் அஹ்மதிகளுக்கு மட்டும் அல்லாமல் எல்லா முஸ்லிம்களுக்கும் ஒரு எழுச்சியாக குரலாக திகழ்கின்றார்கள். இன்னொரு உலகப்போரை நம்மால் சகித்து கொள்ள முடியாது. எல்லா சமுதாயங்களும் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டும். இவ்விஷயத்தில் தத்தமது பங்கை செலுத்த வேண்டும் என்று கலீ∴பா அவர்கள் கூறியது எனது உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

◗ எழுத்தாளரான பியாரா சிங் காதுவான் அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு எடுத்துக் கூறினார்கள்:

அமைதியை நிலைநாட்டுவதற்காக ஹுஸூர் அவர்கள் கூறியுள்ள சொற்கள் மிகவும் அவசியமானவையாகும். அவர்கள் கூறிய போதனைகளில் பாதியை நாம் செயல்படுத்தினால் கூட நமது தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்க்கையில் அமைதி நிலைநாட்டப்பட்டுவிடும். நடைபெறுகின்ற போர்களும் முடிவுக்கு வந்து விடும். இன்றைய சொற்பொழிவை கேட்டு நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன்.

◗ பீட்டர் ஸோரானட்ஸ் என்ற விருந்தினர் இவ்வாறு தமது கருத்துக்களை தெரிவித்துள்ளார்:

நான் ஹுஸூர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவிக்க விரும்பினேன் ஹுஸூர் அவர்கள் இதற்கான சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கினார்கள். ஹுஸூர் அவர்களை சந்தித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

◗ ஹர்ஜோத் என்ற விருந்தினர் ‘எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு’ என்ற உங்களது முழக்கம் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது என்று கூறினார்.

## அஹ்மதிய்யா முஸ்லிம் இளைஞரணி மற்றும் ஹஸன் இரத்தப் பரிசோதனை நிலையம் இணைந்து நடத்திய இலவச Health Checkup முகாம்

*மேலப்பாளையம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் நடைபெற்ற இந்தத முகாம், ஜனாப் A. நாஸிர் அஹ்மது சாஹிப் (அமீர், மேலப்பாளையம்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவின் துவக்கமாக மாணவர் J. ஸல்மான் அஹ்மது கிராஅத் ஓதினார். இளைஞரணித் தலைவர் ஜனாப் A. ஷம்ஸுல் ஆலம் சாஹிப் வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்ட பொறுப்புப் பிரச்சாரகர் மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது சாஹிப் வாழ்த்துரை வழங்கினார். ஹஸன் இரத்தப் பரிசோதனை நிலைய உரிமையாளர் கலந்து கொண்டு முகாமில் இரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய், இரத்தப் பிரிவு போன்றவை கண்டறியப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது. இம்முகாமில் அப்பகுதியினைச் சார்ந்த மக்கள் பலர் திரளாகக் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.*

*(செய்தி : A. பஷீர் அஹ்மது சாஹிப் – பத்திரிகைச் செயலர்)*

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 18 May 2017 Issue No. 20

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

(குத்பா தொடர்ச்சி...)

அப்படியே எழுந்திருப்பார்கள். உட்காருங்கள். நீங்களே நோயுற்றுள்ளீர்கள் என்று நான் கூறுவேன். எனது மனைவியும் கூறுவார்கள். ஆனால் உடனே எழுந்து விடுவார்கள். அல்லாஹ் மீது மிகவும் தவக்குல் இருந்தது. ஒருமுறை இவரது சிறிய மகனின் திருமணம் பெரியவருக்கு முன் நடந்து விட்டது. பெரிய மகனுக்காக வீட்டிலேயே ஒரு பகுதியை உருவாக்கி இருந்தார்.

இவரது கணவர் கூறினார்: அதனை சிறிய மகனுக்கு தாருங்கள். இப்போதைக்கு வாய்ப்பு இல்லை என்று நான் கூறியபோது இவர் கூறினார். பெரிய மகனுக்கு உருவாக்கியது பெரியமகனுக்குதான். அல்லாஹ் ஏற்பாடு செய்வான் தற்செயலாக அல்லாஹ் உடைய தக்தீராக இருந்தது. திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தபோது இவருக்கு ஒரு வசனத்தின் மீது கவனம் ஏற்பட்டது. தமது கணவரிடம் கூறினார். இந்த வசனத்திலிருந்து நான் விளங்குகிறேன். அல்லாஹ் எனது தேவையை நிறைவேற்றி வைப்பான் என்றார். இந்த வகையில் மிகவும் மலிவான அக்காலத்தில் அவர்கள் Prize Bond எடுத்திருந்தார். அல்லாஹ்வின் அருளால் அன்னாருக்கு ஒரு இலட்ச ரூபாய்க்கு Prize Bond வந்தது. அதன்மூலம் அந்த மகனுக்கும் வீட்டை உருவாக்கினார்.

பிறகு மகன் எழுதுகிறார்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வஃபாத் செய்தி வந்தபோது நாங்கள் அனைவரும் தொழுகைக்காக பள்ளிக்குச் சென்றிருந்தோம். எமது தாயார் மிகவும் அதிர்ச்சிய அடைந்திருந்தார். அப்போது எமது ஒரு பெரிய அண்ணி குரலை உயர்த்தி அழ ஆரம்பித்தார். அப்போது துஆ செய் என்று தாயார் கூறினார்கள். கூறுகிறார்: மூன்றாவது கலீஃபா வஃபாத் ஆகும் போது எனக்கு 9 வயது. அப்போது நான் சிறுவனாக இருந்தேன். ஏதோவொரு விஷயத்தில் எனக்கு சிரிப்பு வந்தது. அப்போது என்னை மிகவும் கடுமையாகக் கண்டித்தார்கள். அமைதியாக இரு. இப்போது ஜமாஅத்தின் நிலை உனக்கு தெரியாதா என்றார்கள். சிறுவயதிலிருந்தே ஜமாஅத்தின் முக்கியத்துவம் என்ன என்று உணர்த்துவார்கள். அதேபோன்று குழந்தைகளுக்கு பல்வேறு ஊக்கத்தொகை தந்து சூராக்கள் மனனம் செய்ய வைப்பார்கள்.

அவர்களது வீட்டில் வளர்ந்த ஒரு பெண் கூறுகிறார்: இப்போது அவளுடைய கணவர் அலுவலகத்தில் பணிபுரிகிறார். தனிச்செயலராக 4–5 வயதிலிருந்து அவர்களது வீட்டில் இருக்கிறேன். அவர்களே படிக்க வைத்தார்கள். எல்லாவகையிலும் தர்பிய்யத் கொடுத்தார்கள். எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள். திருமணத்துக்குப் பிறகு ஒருவேலை என்றால் வீட்டிற்கு என்னை அழைத்து வரச் செய்வார்கள்.

அவர் கூறுகிறார்: ஒருமுறை என் வீட்டிற்கு வந்தார்கள். பழைய காலத்து சோபா ஒன்று கிடந்தது. இது எங்கிருந்து வந்தது என்று கேட்டார்கள். ஏதோ அண்டை வீட்டார் தந்ததாக கூறினேன். அதனை அகற்றச் சொல்லி விட்டு உடனே புதிய சோபா ஒன்றை வாங்கித் தந்தார்கள்.

அந்த பெண்மணி கூறுகிறார்: எனது மகளின் படிப்பிலும் கவனம் செலுத்தினார்கள். கடைசி நோயின் வேளையிலும் கூட எனது மகளின் திருமணத்திற்காக நகைகளை தயாரித்து தந்தார். ஒவ்வொன்றையும் நுட்பமாக பார்க்கக் கூடியவர். இதேபோன்று பால்குடி உறவுகளையும் மிகவும் கவனிக்கக் கூடியவர். இவருக்கு பால் கொடுத்தவரின் மகன் சுவிட்சர்லாந்தில் இருக்கிறார். அவர் கூறுகிறார்: எனது தந்தையார் கஷ்டப்படும்போது ஒவ்வொரு கஷ்டத்திலும் அவரை கவனித்துக் கொண்டார்.

அவரது பால்குடி சகோதர் எழுதுகிறார்: மிகவும் நல்ல முறையில் அவரை கவனித்துக் கொண்டார். மிகவும் பணிவுடன் நோயின் நாட்களில் அவர்களைக் கவனத்தில் கொண்டார். இன்னும் பல நற்பண்புகள் இருந்தன. அல்லாஹ் இவர்களின் பிள்ளைகளிடமும் இந்த பண்புகளை தொடரச் செய்வனாக! கிலாஃபத்துடன் அவர்களுக்கு தொடர்பு இருக்கட்டுமாக! இவர்களின் தகுதியை அல்லாஹ் உயர்த்துவானாக!

தொழுகைக்குப் பிறகு நான் குறிப்பிட்ட இந்த மூன்று மர்ஹூம்களுக்கும் ஜனாஸா காயிப் தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

இவை அனைத்தும் கொடிய விஷமாகும். இவற்றை உண்ட பின் அவற்றிலிருந்து எவ்விதத்திலும் நீங்கள் தப்பிப் பிழைக்க மாட்டீர்கள். இருளும் ஒளியும் ஒரே இடத்தில் ஒன்று சேரக் கூடியவை அல்ல. இறைவனோடு தொடர்புள்ள தூய்மையான இதயம் உள்ளவர்களுக்கு கிடைக்கும் தெய்வீக அருட்கொடைகளை, இறைவனோடு நல்ல தொடர்பு இல்லாத தீய குணத்தைக் கொண்டவர்கள் ஒருபோதும் பெற முடியாது. தங்களது உள்ளங்களை சுத்தம் செய்வோரும் தூய்மைப்படுத்துவோரும் தன் இறைவனுடன் நன்றி உணர்வோடு இருப்பதாக உறுதிமொழி கூறுபவரும் எத்தகைய பெரும் பாக்கியசாலிகளாய் இருக்கிறார்கள்! ஏனெனில் அவர்கள் ஒருபோதும் வீணாக்கப்படமாட்டார்கள். இறைவன் அவர்களை இழிவுபடுத்துவான் என்பது ஒருபோதும் நடக்காத காரியமாகும். ஏனெனில் அவர்கள் இறைவனுக்காகவே ஆகிவிட்டவர்களாவர். இறைவனும் அவர்களுக்காக ஆகி விட்டான். அவர்கள் ஒவ்வோர் ஆபத்தான சமயத்திலும் காப்பாற்றப்படுவார்கள். ஆகவே அவர்களை எதிர்க்கும் பகைவன் அறிவீனனாவான். ஏனெனில் அவர்கள் இறைவனது மடியில் அமர்ந்துள்ளனர். மேலும் இறைவன் அவர்களுக்கு துணைபுரிந்தும் வருகிறான். இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர் யார்? இத்தகையவர்களே அவன் மீது நம்பிக்கை கொண்டவர்களாவர். இவ்வாறே ஒரு பெரிய பாவியைப் பற்றியும் வஞ்சகனைப் பற்றியும் துஷ்டனைப் பற்றியும் கவலை கொள்பவனும் அறிவீனனேயாவான். ஏனெனில் இதனால் அவனே அழிந்து விடுவான்.

இறைவன் வானங்களையும் பூமியையும் உண்டு பண்ணிய காலத்தில் இருந்து அவன் தன் நல்லடியார்களை அழித்து நாசப்படுத்தி இருக்கிறானா என்ன? இல்லை. மாறாக, அவன் பெரும் மகத்தான பணிகளை தனது அடியார்களின் பொருட்டாக செய்து வந்திருக்கிறான். அவ்விறைவன் எப்போதும் அவ்வாறே செய்து வருகிறான். அவ்விறைவன் மிகவும் நன்றியுடையவனாவான். நன்றியுடைவர்களுக்காக அவனது அற்புதமான செயல்கள் வெளியாகின்றன. அவர்களை விழுங்கி விட உலகம் விரும்புகிறது. அவர்களைக் கண்டு ஒவ்வொரு பகையாளியும் தன் பல்லைக் கடிக்கிறான். ஆனால் அவர்களின் தோழனாகிய அவ்விறைவனோ அவர்களை ஒவ்வொரு அழிவிலிருந்தும் காப்பாற்றுகிறான்.

மேலும் ஒவ்வொரு களத்திலும் அவர்களுக்கு வெற்றியை அளிக்கிறான். இத்தகைய இறைவனோடுள்ள உறவை விடாதவர் எத்தகைய நற்பேறு பெற்றவராவார்! நாம் அவன் மீது நம்பிக்கை கொண்டோம். நாம் அவனை அறிந்து கொண்டோம். (கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 18-20)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு ஒரு மகத்தான ஆதாரம்

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْأَقَاوِيلِ ﴿٤٥﴾ لَأَخَذْنَا مِنْهُ بِالْيَمِينِ ﴿٤٦﴾ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِينَ ﴿٤٧﴾

அவர் எந்த சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால் நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பிறகு நிச்சயமாக நாம் அவரது உயிர் நாடியைத் துண்டித்திருப்போம். (69:45-47)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனரும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இஸ்லாத்தின் உண்மை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தனக்கு இருக்கின்ற ஆன்மீகத் தொடர்பு குறித்து பலமுறை இறைவன் மீது சத்தியம் செய்தவாறு நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன் என்று கூறியுள்ளார்கள். அவர்களது அத்தகைய பெரும்பாலான மேற்கோள்களைத் தொகுத்து, “இறைவன் மீது ஆணையாக” என்ற பெயரில் ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த நூலைப் பெற விருப்பமுள்ள சகோதரர்கள் போஸ்ட் கார்டு அல்லது மின்னணு அஞ்சல் (Email) மூலம் தெரியப்படுத்தி அந்த நூலை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**E-mail: abdulqadir.wahid@gmail.com**
**MOB : 9626445578**
Postal-Address: ABDUL QADIR AHMADIYYA MUSLIM MISSION
No. 3, United India Colony, Frist Main Road, Kodambakkam,
Chennai - 600 024, TAMIL NADU.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad